வந்தது. அதைச் சரி செய்வதற்காக, அந்தப் பகுதிகளைக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் இணைக்க வேண்டுமென்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். எனவே, அது சரி செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வினா வரிசை எண் 39, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

39—

கால்நடை பெரு மருத்துவமனை

***51168—திருமதி எஸ். விஜயதரணி:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், மைலாடி பேரூராட்சி, மைலாடியில் கால்நடை பெருமருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தொகுதி, மைலாடி பேரூராட்சியில் மைலாடியில் ஏற்கெனவே செயல்பட்டு வந்த கால்நடைக் கிளை நிலையம் கடந்த 30-12-2014 அன்று முதல் கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்பட்டு, செயல்பட்டு வருகிறது. மேலும், இந்தக் கால்நடை மருந்தகத்திற்குச் சொந்தமாக புதிய கட்டடம் கட்டுவதற்காக ரூ.24 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கட்டடம் கட்டும் பணியும் தொடங்கப்பட்டுள்ளது. இந்த நேரத்திலே ஒரு தகவலை இந்த மன்றத்தில் நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

கடந்த 5 ஆண்டுகாலத்தில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே ஏறக்குறைய 1,615 கால்நடை மருத்துவ நிலையங்கள் கட்டுவதற்கு ரூ.422 கோடி நிதி ஒதுக்கப்பட்டு, 1,265 கட்டடங்கள் மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கரங்களினாலே அனைத்து சட்டமன்ற உறுப்பினர் தொகுதிகளிலும் திறந்து வைக்கப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) தற்போது 350 கால்நடை மருத்துவ நிலையக் கட்டடங்கள் கட்டும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது என்பதை இந்த நேரத்தில் பதிவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 10–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 40, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

40—

கூட்டுறவு நூற்பாலை

*__64042__—**திரு. சு. ரவி:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதியில் ஆதி திராவிடர் மக்களுக்கென கூட்டுறவு நூற்பாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெற்றி, வெற்றி, வெற்றி! இனி அம்மா அவர்களுக்கு எல்லாமே வெற்றிதான் என்று சொல்லி, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.*